விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*



# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 20 செவ்வாய்க்கிழமை (06.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322




தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதி வணக்க நிகழ்வில் அவரது துணைவியார் ஈகச்சுடரேற்றுவதனையும்,நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் விடுதலைப்புலி உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

# தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வில் பெருந்திரளான மக்கள் பங்கேற்பு

(கிளிநொச்சி)

விமானப் படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் பலியாகிய விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை 6 மணியளவில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பை பலப்படுத்துமாறு எம்.பிக்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விமானத்தாக்குதலில் உயிரிழந்ததையடுத்தே ஜனாதிபதி இவ் அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலுக்கு எதிரொலியாக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற புலனாய்வுத்துறை தகவலையடுத்தே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற சந்திப்பின்போதே இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (சு)

## ஓமந்தை சோதனைச்சாவடி நேற்று மூடப்பட்டது

ஓமந்தைச் சோதனைச் சாவடி நேற்று மூடப்பட்டது. ஓமந்தை நுழைவாயில் பகுதியில் நேற்று இடம்பெற்ற பதற்ற சூழ்நிலையை அடுத்து அங்கு கடமையிலிருந்த செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் வெளியேறினர்.

இதனையடுத்தே பாதை மூடப்பட்டுள்ளது. ஓமந்தை முன்னரங்க பகுதியில் விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதலை நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார். செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி

# தமிழீழத்தைத் தவிர வேறு எந்த சக்தியும் தமிழ்ச்செல்வனின் இழப்புக்கு ஈடாகாது

## புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு உரை

(கிளிநொச்சி)

ஒரு சில படையினரோ அல்லது ஓராயிரம் படையினரோ அல்லது ஒரு சில அரசியல் தலைவர்களோ தமிழ்ச்செல்வனின் உயிருக்கு

துள்ளார். கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதி வீரவணக்க நிகழ்வில் அவர் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரி

டும்தான் தமிழ்ச்செல்வன் என்று தெரிந்திருந்தது. ஆனால் எமது தேசியத் தலைவருக்கோ தமிழ்ச்செல்வனை ஒரு தேசத்தின் அரசியலை முன்னெடுக்கக்கூடிய, தேசத்தின் அரசியல்

புலிகள் மோட்டார்த் தாக்குதலை நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார். செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் தமது கடமையை அப்பகுதியில் ஆரம்பித்தால் மட்டுமே ஓமந்தைச் சோதனைச் சாவடியை திறக்க முடியும் என அவர் கூறினார். (ஏ)

ஒரு சில படையினரோ அல்லது ஓராயிரம் படையினரோ அல்லது ஒரு சில அரசியல் தலைவர்களோ தமிழ்ச்செல்வனின் உயிருக்கு ஈடாக முடியாது. தமிழீழம் என்ற உயர்ந்த கனவே தமிழ்ச்செல்வனின் உயிருக்கான விலை என விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மான் தெரிவித்

சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதி வீரவணக்க நிகழ்வில் அவர் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தமிழ்ச்செல்வனின் இழப்பு தமிழினத்திற்குப் பேரிழப்பு. தொடக்க காலத்தில் ஒரு மருத்துவப் போராளியாக, போர்கள விற்பன்னராக மட்

தது. ஆனால் எமது தேசியத் தலைவருக்கோ தமிழ்ச்செல்வனை ஒரு தேசத்தின் அரசியலை முன்னெடுக்கக்கூடிய, தேசத்தின் அரசியல் என்று கூறுவதனை விட விடுதலை வேண்டி நிற்கும் விடுதலை அரசியலை முன்னெடுக்கத்தக்க வகையில் ஒரு அரசியல் ஞானியாக தென்பட்டார். தமிழ்ச் (08 ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தல், காணாமல் போனமை குறித்து நேற்று நான்கு முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடத்தல் மற்றும் காணாமல் போனோர் குறித்து 4 முறைப்பாடுகள் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.தினக்குரல் பத்திரிகையின் விநியோகஸ்தரும் ஆனைக்கோட்டையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான செரின் சித்திரரஞ்சன் (வயது 37) என்பவர் நேற்று முன்தினம் முதல் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். விநியோகப் பணிக்காக சென்ற சமயம் காலை 7.15 மணியளவில் ஏழாலைப் பகுதியில் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பு சமாதானத்தை பாதிக்காது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பு சமாதானத்தை எந்தவிதத்திலும் பாதிக்காது என பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு (08 ஆம் பக்கம் பார்க்க)

# விசேட அடையாள அட்டை பெற்றவர் பயண அனுமதி பெறத்தேவையில்லை

## யாழ்.இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் புதிதாக வழங்கப்படவுள்ள விசேட அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் பயண அனுமதி பெற்றுக் கொள்ளாது வெளியிடங்களுக்குச் செல்ல முடியும் என இராணுவம் அறிவித்துள்ளது. விசேட அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்ப இறுதித் திகதி தொடர்பாக இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இராணுவ விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை இம் மாதம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# வீரகேசரி வாரவெளியீட்டின் செய்தியாளர் உட்பட மூவர் விடுதலை

(கொழும்பு)

கொம்பனித்தெரு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து கைது செய்யப்பட்ட வீரகேசரி வார வெளியீட்டின் ஊடகவியலாளர், புகைப்படப்பிடிப்பாளர், வாகன சாரதி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொம்பனி தெருவிலுள்ள குடியிருப்பு பகுதியில் வாழும் மக்களுடன் நேர்காணல் ஒன்றை செய்தி சேகரிக்கச் சென்ற வேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

புகைப்படப்பிடிப்பாளரது கமராவும் சோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளரான எம்.எ.பாகிம், எம்.எஸ்.சலீம் மற்றும் வாகனச் சாரதியான கருப்பையா இராஜேந்திரன் ஆகியோர் கொம்பனித் தெரு பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டு நேற்று அதிகாலை 3 மணியளவில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் கமரா மற்றும் இவர்கள் பயணித்த வாகனம் என்பன கொம்பனித்தெரு பொலிஸாரிடம் உள்ளன. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



ஓம்

சுவாமியே சரணம் ஐயப்பா

## பாலாலய கும்பாபிஷேகம்

உரும்பிராய் சந்தி முதல் ஒழுங்கையில் வீற்றிருக்கும் புதிய சிவதர்மசாஸ்த்தாவுக்கு நாளை 7.11.2007 புதன்கிழமை பகல் 9.03 மணி முதல் 10 மணிவரையிலான சுபமுகூர்த்த தினத்தில் பாலாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற சபரிமலை பம்பையின் பாலனின் அருள்பாலித்துள்ளது.

அடியார்கள், சுவாமிமார்கள் வந்து தரிசித்து சுவாமி ஐயப்ப னின் திருவருளை பெறுவீர்களாக!

கார்த்திகை 1ஆம் திகதி முதல் மகர ஜோதி மண்டல விரத பூசை, அபிஷேகம்,பஜனை, படிப்பூசை என்பன நடைபெறவுள்ளது. சுவாமிமார்கள், மாலைபோடுபவர்கள், உபயம் செய்ய விரும்பு பவர்கள் ஐந்து நாட்களுக்கு முன் எமது இல்லத்தில் எம்முடன் கலந்து கொள்ளவும்

சுவாமி சரணம்.

குறிப்பு:
சபரிமலை செல்ல முடியாதவர்கட்கு இருமுடிகட்டி 18 படி ஏறி நெய் அபிஷேகம் செய்யும் வசதி செய்து தரப்படும்.
இடம்-நவிண்டில் சுந்தரஐயப்பன் ஆலயம்

குருசுவாமி
தாணு-வாசுதேவக்குருக்கள்
(534) கற்பகபிள்ளையார்கோயில் பிரதமகுரு உரும்பிராய்.


# தமிழ்செல்வன் மீதான படுகொலையானது பேச்சுவார்த்தைக்கு அடிக்கப்பட்ட சாவுமணி

## அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனை படுகொலை செய்துள்ளமையானது பேச்சுவார்த்தைகளுக்கு அடிக்கப்பட்ட சாவுமணி என்று அமெரிக்க மிசன் திருச்சபைத் தலைவர் எஸ்.ஜெயநேசன் அடிகளார் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையகத்திற்கு அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலையானது பேரினவாத அரசு, தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமாட்டீர்து என்பதற்கு அடிக்கப்பட்ட சாவு மணியாகும்.

இதன் மூலம் தெளிவுபடும் உண்மையானது, தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளை போராட்டத்தின் மூலமே பெறமுடியும் என்பது புலனாகிறது.மற்றைய அனைத்துக் கதவுகளையும் அரசாங்கமே மூடிவிட்டதாகவே தமிழ் மக்கள் கருதவேண்டியுள்ளது.

சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கைத் தமிழ் மக்களின் தலைசிறந்த அரசியல் தலைவராக, ஞானம் நிறைந்தவராக, எதிரியையும் தன் புன்முறுவலினால் சமாதானப்படுத்தும்தன்மை, அரசியல் தெளிவு, தன்னை ஒப்படைத்தல், போராடும் வல்லமை, மக்களின் குரலாக ஓங்கி ஒலித்து பல தடவைகள் அரசியல் பேச்சுவார்த்தைகளில் முன்னின்று உழைத்தவர்.போராடும் திறனும்,அரசியல் ஞானமும் புலிகளின் கைவந்த கலை என்பது உலகறிந்த உண்மை.இப்படுகொலை அகில உலகத்திற்கு ஒரு செய்தியைச் சொல்கிறது. தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழ் மக்களின் போராட்டத்தினை நியாயப்படுத்த வேண்டும்.

இப்படுகொலையினால் துயருறும் அவரின் குடும்பத்தினர், அரசியல்துறையினர், தமிழ்ச் சமூகத்தினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அதில் அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

## வலி கிழக்கு பிரதேச சபை,புத்தூர் கேள்வி அறிவித்தல்-2008

**கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சி கடைகளினை 2008-ம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 07.11.2007- 16.11.2007 பி.ப.2.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 22.11.2007 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 22.11.2007 பி.ப. 1.00 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை 'செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, (ரெலிக்கொம் அருகாமை) யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 22.11.2007 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல. வேலையின் பெயர் | கேள்விப் பத்திரபணம் வற் நீங்கலாக | மீளளிக்கப் படக்கூடிய வைப்புப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| அச்சுவேலி உப.அலுவலகம் | | | |
| 01. அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 845000.00 |
| 02. வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 16275.00 |
| 03. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 177000.00 |
| 04. அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 17250.00 |
| 05. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 32500.00 |
| 06. அச்சுவேலி சந்தை சுற்றாடல் வாகனத்தரிப்பு நிலையம் | 250.00 | 500.00 | 42500.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | |
| 01. கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 16200.00 |
| 02. இருபாலை பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 16000.00 |
| 03. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 52500.00 |
| 04. இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 115750.00 |
| 05. இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 11500.00 |
| 06. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2500.00 |
| உரும்பிராய் உப அலுவலகம் | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 142500.00 |
| 02. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 60000.00 |
| 03. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 79000.00 |
| 04. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 13000.00 |
| 05. உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 90000.00 |
| புத்தூர் உப அலுவலகம் | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 105000.00 |
| 02. புத்தூர் பொதுச் சந்தை | 250.00 | 500.00 | 38600.00 |
| 03. புத்தூர் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7250.00 |
| 04. ஆவரங்கால் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 9750.00 |
| நீர்வேலி உப அலுவலகம் | | | |
| 01. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 39000.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7000.00 |
| 03.நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 3800.00 |
| 04. நீர்வேலி பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 6750.00 |

*குறிப்பு:*

01) சந்தையிலிருந்து 01 கிலோமீற்றர் சுற்றாடலில் மீன்,மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

02) கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புவோர் தத்தமது பிரதேச கிராமசெயலாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.

03) கேள்விப்பத்திரப்பணம்,சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போதுள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

04) இறைச்சிக்கடைக்கு விண்ணப்ப படிவம் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

05) மேலதிக விபரங்களையும்,விண்ணப்ப படிவங்களையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேச சபை
தலைமை அலுவலகம்
புத்தூர்.
05.11.2007

தம்பையா நடராசா
செயலாளர்.

(சி-513)


### தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்விலிருந்து-











# இன்று ஒரு தகவல்

## புயல்

``அந்த மரத்துக்கு அடியிலே கொஞ்சநேரம் உட்காந்திருந்தேன். காற்று சுகமாக வீசியது! ஆனந்தமாக இருந்தது!... என்று சொல்வதுண்டு. காற்று மெதுவாக வீசினால் அது சுகமாகத்தான் இருக்கும். அதுவே புயலாக வீசினால் சுகமாகவா இருக்கும்? கடற்கரைக்குப் போவதுகூட காற்று வாங்குவதற்காகத்தான்! புயல் வாங்குவதற்காக அல்ல! புயல் வாங்குவதற்காக கடற்கரைக்குப் போகிறேன் என்று சொன்னால்... இவரால் புயலை வாங்க முடியாது! புயல் இவரை வாங்கிக் கொண்டு போய்விடும். தூக்கிக்கொண்டு போய் கடலிலே போட்டு விடும். அப்புறம் தட்டுத்தடுமாறி நீச்சலடித்து கரைக்கு வந்துசேர வேண்டும். காற்று வாங்கப்போனவர் மூச்சுவாங்க வீட்டுக்கு வந்து சேர்வது போல ஆகிவிடும்!

உயிர் வாழ்வதற்கு காற்று மிகவும் அவசியம்தான்! அது மெதுவாக வீசினால் தென்றல் தவழுகிறது என்போம் மந்த மந்த மணர்தது மாருதம்!'' சுமாராக இருந்தால் வீசுகிறது என்போம். புயலாக இருந்தால் சீறு கிறது என்போம். வித்தியாசம் என்பது இங்கே வேகத்தைப் பொறுத்தது. புயல் ``நான் இத்தனை மணிக்கு இந்த இடத்துக்கு வரப்போகிறேன். எல்லாரும் ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்லிவிட்டு வருவதில்லை. இருந்தாலும் அது வரப்போவது பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்கு மனிதன் முயற்சி செய்கிறான். இருந்தாலும் இந்த முயற்சியிலே முழுவெற்றி கிடைத்து விட்டதாகச் சொல்ல முடியாது. ஆனாலும் சில அறிகுறிகளை வைத்து இந்த முயற்சியிலே முழு வெற்றி கிடைத்ததாகச் சொல்ல முடியாது. ஆனாலும் சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு அதைக் கண்டு பிடிக்க முடியும். சில சாதனங்கள் இருக்கின்றன. அவற்றால்கூட புயல் வருவதற்கு ஒருமணி நேரத்துக்கு முன்னால்தான் அதைக் கண்டுபிடித்துச் செல்ல முடிகிறது. வேறு சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு அதை யூகிக்கலாம்.

கடல் பகுதியிலே வேகமான காற்று உருவாகும். அதன் காரணமாக உண்டாகும் கடல் அலைகள் நாலா திசையிலும் சஞ்சரித்து சாதாரணமாக காற்று அடிக்காத பகுதிகளில் கூட கடுமையான அலைகள் உண்டாகும். இதை "ஸ்வெல்" (Swell) என்று சொல்வார்கள். சாதாரண நாளிலே கடலின் உட்பகுதியிலே காணப்படாத இந்த ஸ்வெல்கள் பரவிப் படர்ந்து கடற்கரை ஓரத்திலும் தென்பட ஆரம்பித்தால் அங்கே புயலை எதிர்பார்க்கலாம்.

மேகங்களிலே பலவகை உண்டு... அதில் சைரஸ் (Cirrus) என்பது நார்கள் மாதிரி அமைந்திருக்கும் மேகங்கள் இது வானத்திலே தெரிந்தாலும் அது புயலுக்கு ஓர் அறிகுறிதான்!

புயல் மையம் இருக்கிறதல்லவா அதற்குச் செங்குத்தான உயரத்திலே இந்த மேகங்கள் தென்படும் புயல் தீவிரமாகிறபோது (Cirro stratus) மேகம் வானத்தை மூடியிருக்கும். சூரியன் உதயமாகிற நேரம் மறைகிற நேரங்களிலே வானம் பிரகாசமான சிவப்பு நிறத்திலே இருக்கும். புயல் காற்று நூறாவது மைலிலே வீசும் போதே நாம் இருக்கிற இடத்திலே காற்றின் திசையிலே மாற்றம் ஏற்படும். காற்றமுத்தம் திடீரெனக் கூடும் குறையும்! அடுத்தடுத்து காற்றழுத்தம் குறைந்து கொண்டே போனால் புயல் எங்களைத் தேடிவந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். சாதாரணமாக வீசிக் கொண்டிருக்கிற காற்றினுடைய திசை அடிக்கடி மாறும். வேகமும் அதிகரிக்கும். புயல் வருவதற்கு முன்னருள்ள சூழ்நிலை புழுக்க மாகவும் வரண்டும் இருக்கும்.

சலனம் இல்லாமல் சூனியமாக இருந்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். புயலுக்குப் பின் அமைதி என்கிறோமே அதுமாதிரி அமைதிக்குப்பின் புயல்! மைக்ரோ சீஸ்மோகிராஃப் என்னும் நூதனமான கருவியில் கடலிலே புயல்காற்றை உண்டாக்கும் சின்னச் சலனம் கூடப் பதிலாகிவிடும். இப்பொழுது செயற் கைக் கோள்கள் புயல்பற்றி முன்கூட்டியே அறிவதற்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. புயலினுடைய வேகத்தைக் குறைப்பதற்கு அமெரிக்காவிலே ஒரு சோதனை நடந்தது. ஒரு வேவு விமானம் புயல் கண்ணை நோக்கிப் பறந்துபோய் சில்லர் அயோடைட் குண்டுகளைப் பொழிந்ததாம் இதனால் காற்றினுடைய சக்தியை 31 சதவீதம் குறைக்க முடிந்ததாம். இதையெல்லாம் பார்க்கும் போது இயற்கையை வெல்வது கஷ்டம் என்றுதான் தோன்றுகிறது. உலகத்தை அழிக்கக் கூடிய அணுகுண்டை மனிதனால் தயாரிக்க முடிகிறது. ஆனால் அழிக்க வரும் புயலை தடுத்து நிறுத்த முடியவில்லை!

"புயல் வேகம்" பொன்னம்பலம் என்று மேடைப்பேச்சாளர் ஒருவர் இருந்தார். அவர் பேசினால் இடி இடிப்பது போல இருக்கும். அவர் பேச்சைக் கேட்பவர்கள் எல்லாரும் நடு நடுங்கிப் போய்விடுவார்கள்.

அவர் ஒருநாள் மனைவியைக் கூப்பிட்டு புயல்வேகப் பிரசாரத்துக்காகப் போகிறேன். திரும்பிவர ஒரு வாரத்துக்கு மேலாகும் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அவர் புறப்பட்டுப் போன 15 நிமிஷத்திலே வீட்டுக்குத் திரும்பி விட்டார். போன வேகத்திலேயே ``என்ன நடந்தது'' என்று கேட்டார் மனைவி ``உண்மையாகவே புயல் வரப்போகிறதாம். அதனால் எனது பேச்சை ரத்து செய்து விட்டுத் திரும்பிவிட்டேன்" என்றாராம் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஈழத்தமிழர் அழிந்துபோக இந்தியா இடம் கொடுக்கக்கூடாது
# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாளிதழ் ஜனசக்தி தலையங்கம்

ஈழத் தமிழர் அழிந்துபோக இந்தியா எவ்விதத்திலும் இடம் கொடுக்கக்கூடாது என்று இந்திய ஆளும் மத்திய அரசின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சியின்தமிழ்நாடுபிரிவுவலியுறுத்தியுள்ளது.

இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு பிரிவின் உத்தியோகப்பூர்வ நாளிதழான ``ஜனசக்தி'' யில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மறைவு பல்வேறு கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது. இன்னமும் பேச்சுவார்த்தையின் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசு தயாராக இருக்கிறதா என்பது அவற்றில் முதன்மையான கேள்வி.

தமிழ்ச்செல்வனைக் கொன்றதன் மூலம் இலங்கை அரசு எதனை சாதிக்க விரும்புகிறது? தமிழர் சிங்களவர் என்று இரண்டாகப் பிரிந்து கிடக்கும் இலங்கையில் இதன் மூலம் இன ஒற்றுமையை மீண்டும் அரசாங்கத்தால் உருவாக்க முடியுமா? இவ்வாறான தாக்குதல்கள், அழிப்பின் மூலம் இலங்கையில் ஒற் றுமையை உருவாக்க முடியாது என்பது கடந்த காலம் கற்றுத் தந்துள்ள பாடம். இருந்தாலும் இலங்கை அரசு இதனை செய்திருப்பதற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்க வேண்டும்.

புன்னகை மாறாத முகப்பொலிவைப் பெற்ற தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டிருப்பது அனைவருக்கும் பெரும் வேதனையை அளித்திருக்கிறது. தமிழக முதல்வர் உள்ளிட்ட சில கட்சிகளைத் தவிர அனைவரும் இறப்பின் துயரத்தை தமிழ் மக்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் பங்கு பெற்ற அமைதிக்கான உலகத் தலைவர்கள் அனைவரும் அமைதி முயற்சிகளுக்கு இது ஒரு பின்னடைவு என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் இலங்கையில் எழுந்துள்ள ஆதிக்க வெறியர்களின் குரல் இதிலிருந்து மாறுபட்டுள்ளது.

புத்த பிக்குகள் இப்படிப்பட்ட கொலைகளின் மூலம்தான் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருகிறார் கள். அரசாங்கத்தோடு நெருங் கிய தொடர்பில் உள்ள அனைவ ரும் இதே கருத்தைத் தெரிவிக்கி றார்கள். இதுதான் அரசாங்கத் தின் நிலை என்றால் பேச்சுவார்த்தை என்ற சொல் அர்த்தமிழந்து போய் விடும். நோர்வே, ஜெனிவா, ஜப் பான் என்று தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தையின் பலன் முற்றாகப் பயனற்றதாகி விடும்.

சிங்கள மக்களுக்கு வெறியேற்றி அவர்களிடம் உள்ள வாக்குகளைப் பெறுதல், ஆதிக்க அரசியலாக வெகு காலமாக இலங்கையில் தொடர்ந்து வருகிறது. வேறு எதையும் விட அவர் களுக்கு இவ்வாறான நடவடிக்கைகள் மிகவும் சுலபமானதாக இருக்கின்றன. ஆனால் நாடு, மக்கள், நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றின் கதி என்னவாகும்? ஆனால் ஆதிக்க வெறியும் சுயநல போதையும் வந்துவிட்டால் அது யாருடைய இழப்பைப் பற்றியும் கவலை கொள்வதில்லை. இந்தப் பின்னணியில் இந்திய அரசு என்ன செய்யப் போகிறது என்பது இதில் முக்கியமான கேள்வி? இலங்கை இந்தியாவின் அண்டைநாடு, நடைபெறும் போராட்டம் தமிழ் மக்களின் போராட்டம் இதில் இந்திய அரசு வெறும் பரர்வையாளராக மட்டும் இருந்துவிட முடியாது.

இந்திய அரசாங்கத்தின் இரா ணுவ உதவியைப் பெற்று போரின் மூலம் பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என இலங்கை அரசு கணக்குப் போடுகிறது. அவ்வாறு நடக்குமானால் அதில் தமிழ் மக்கள் அழிந்துபோகும் வாய்ப்புகள் தான் அதிகம் இருக்கும். இதற்கு எந்தவிதத்திலும் இந்திய அரசு இடம் கொடுத்து விடக்கூடாது. பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட தன்னாலான எல்லா முயற்சிகளையும் இந்தியா செய்வது தான் இன்றைய தேவை என்று அத் தலையங்கத்தில் வ்லியுறுத்தப் பட்டுள் ளது. (அ-5)

## இராசிபலன்

06.11.2007
(ஐப்பசி 20, செவ்வாய்க்கிழமை)
துவாதசி முன்னிரவு 10.58 மணிவரை
உத்தரம் பிற்பகல் 03.46 மணிவரை
இராகுகாலம் 03.05-04.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேக நலன், சத்துரு ஜெயம், மனமகிழ்ச்சி. |
| இடபம் | வியாபார விருத்தி, மனச்சஞ்சலம், பெரியோர் உதவி, பணவிரயம். |
| மிதுனம் | உறவினர் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு, கல்வியில் ஆர்வம், புதிய முயற்சி. |
| கடகம் | பிரயாண நன்மை, காரிய அனுகூலம், பிறர் உதவி, போசனசுகம். |
| சிங்கம் | மனக்கிலேசம், முயற்சி தாமதமாகும், அதிகசெலவு, எதிர்பாராத நன்மை. |
| கன்னி | தன்னம்பிக்கை, பெரியோர் சந்திப்பு, விருந்துபசாரம், நல்ல முயற்சி. |
| துலாம் | காரிய அலைச்சல், உஷ்ண வியாதி, சுபசெலவு, மனஸ்தாபம். |
| விருச்சிகம் | காரிய அனுகூலம், நல்ல வருமானம், பெருமையடைதல், விருந்துபசாரம். |
| தனுசு | தொழில்நன்மை, முயற்சி கைகூடும், பிறர் உதவி, அதிகாரம். |
| மகரம் | தந்தைவழி உறவு, புதிய திருப்பம், பித்த ரோகம், முயற்சி தாமதம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், பிரயாண பயம், பணக்குறைவு. |
| மீனம் | சௌக்கிய விருத்தி, களஸ்திரநன்மை, காரிய சித்தி, போசன சுகம். |

வ ள வ ன்

## வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பு

(சென்னை)

வங்க கடலில் கடந்த வாரம் உருவான குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழ் நாடு முழுவதும் பலத்த மழை பெய்தது. பின்னர் காற்றமுத்த தாழ்வு மண்டலம் வலு இழந்தது.

தற்போது வங்கக் கடலில் இலங்கைக்கும், தமிழ்நாடுக்கும் இடையே சனிக்கிழமை புதிதாக ஒரு குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. அது மேற்கு நோக்கி நகர்ந்து மன்னார் வளை குடாவில் தமிழ்நாடு ஆந்திரா கடற்கரைப் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை நீடிப்பதால் தமிழ்நாட்டில் அடுத்த 24 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. சென்னையில் நேற்று முன்தினம் காலையில் இருந்தே வானம் மேக மூட்டத்துடன் இருந்தது. பகல் 12 மணிக்கு பலத்த மழைகொட்டியது. மதியம் 1.30 மணி வரை இந்த மழை நீடித்தது. இதனால் சாலைகளில் மழைநீர் ஆறு போல் பெருக் கெடுத்து ஓடியது.

மழை நீர்ரோடுகளில் தேங்கி நின்றதால் சென்னை நகரின் பல இடங்களில் போக்குவரத்து பாதிக் கப்பட்டது. வாகனங்கள் மெது வாக ஊர்ந்து சென்றன. புரசை வாக்கத்தில் முழங்கால் அள வுக்கு தண்ணீர் ஓடியது. அங்கு கடுமையான போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. எழும் பூரில் ரெயில் தண்டவாளங்கள் தண்ணீரில் மூழ்கின. சென்டிரல் ரெயில் நிலையம், பாரிமுனை பஸ் நிலையம் போன்ற பகுதிகளிலும் மழை நீர் தேங்கியதால் மக்கள் அவதிப்பட்டனர்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்து இருப்பதாலும், குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை காரணமாகவும் அடுத்த சில மணி நேரத்துக்கு தமிழ்நாடு மற்றும் புதுவையில் பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு புதுவை கடலோர மாவட்டங்களிலும், சென்னை காஞ்சீபுரம், திருவள்ளுவர், கடலூர், விழுப்புரம், தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக் கோட்டை மாவட்டங்களில் ஆங்காங்கே மிக பலத்த மழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து தமிழ் தேசிய கூட்டமைப்பு வாக்களிக்கும்

பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதால் வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது சகலரையும் சமூகமளிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

அரசு பாதுகாப்புக்கான ஒதுக்கீட்டை அதிகரித்திருப்பதால் சென்ற ஆண்டு செய்தது போல் ஆட்சி எதிர்த்து வாக்களிக்கும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள் ளார்.

தமிழ் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் இராணுவ நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)



வடமராட்சி கல்வி வலயத்தில் பருத்தித்துறைக் கோட்ட ஆசிரியர்களுக்கான ஜி.ரி.சற் நிதி அனுசரணையுடன் நடைபெற்ற கணித பாட செயலமர்வில் பங்கு பற்றியவர்களைப் படத்தில் காணலாம்.

# குரு பெயர்ச்சி

## உங்களுக்கு எப்படி?



**கன்னி**

உத்தரம் 2,3,4 பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 பாதங்கள்

**16.11.2007 முதல் 30.11.2008 வரை**

பெயரின் முதல் எழுத்துக்கள்: ப,பி,பூ,ஷ, ண,ட,பே,போ உள்ளவர்களுக்கும்

### சொத்து சேர்க்கைக்கு அஸ்திவாரமிட வைக்கும் நான்காமிடத்து குரு

கவர்ச்சியான பேச்சாற்றலால் காரியங்களை சாதித்துக்கொள்ளும் கன்னிராசிநேயர்களே! நல்ல தகவல்களையே நாளும் கேட்க வேண்டும் என்று விரும்பும் உங்களுக்கு குரு பெயர்ச்சியால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடப் போகிறது. திரும்புகிற பக்கமெல்லாம் செல்வாக்கு மேலோங்கும். பெரும் பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரலாம். பிரச்சினைகளிலிருந்து விடுபட அர்ச்சனை செய்ய வேண்டியது குருவிற்குத்தான்.

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் நவம்பர் 16ஆம் திகதி முதல் நான்காமிடத்தில் சஞ்சரித்து நன்மைகளை அதிகம் வழங்கப் போகிறார். சுகாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேருமல்லவா? எனவே முகங்களில் மலர்ச்சி தோன்றும். முன்னேற்றம் வந்து கூடும். அகத்தினில் நினைத்ததெல்லாம் அடுத்தடுத்து நிறைவேறி ஆனந்தப்படுத்தும். உலாவரும் குருவால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு அமையப் போகிறது.

### வருகிற காலம் வசந்த காலம்

கற்ற கல்வியைக் காட்டிலும், பெற்ற அனுபவங்களே உங்களுக்கு ஏராளம். உற்றார், உறவினர்கள் உங்கள் வளர்ச்சியைக் கண்டு ஆச்சரியப்படுவர். ஆதங்கப்படவும் செய்வர். எனவே உங்களது ஒவ்வொரு முன்னேற்றத்தையும் மற்றவர்களிடம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தால் மகிழ்ச்சியை நாளும் தக்க வைத்துக்கொள்ள இயலும்.

புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுபவர் நீங்கள். பொன் - பொருள் மீது அதிக ஆசைப்படமாட்டீர்கள். நமக்கு கிடைப்பது கிடைத்தால் போதும் என்று சொல்வீர்கள். நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் நீங்கள். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்தே செய்வீர்கள்.

வெளி உலகத்திற்கு சிக்கனமானவரைப் போல நீங்கள் தோற்றமளித்தாலும், வரவறிந்து செலவு செய்வதில் வல்லவர்கள். மண வாழ்க்கையில் உங்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்க வேண்டுமென்றால், தினப் பொருத்தம், கணப் பொருத்தம் முதல் தேவையான பொருத்தம் அனைத்தும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் கன்னியரால் கலக்கம் ஏற்படாமல் இருக்கும். வாக்கு ஸ்தானாதிபதியாக சுக்ரன் விளங்குவதால், நீங்கள் இனிமையாக பேசி இதயத்தை கவருவீர்கள். உறவினர்களுக்கு நீங்கள் செய்யும் உதவிகளுக்கு அவர்கள் நன்றி காட்டுவது அரிது.

உங்கள் ராசிநாதன் புதன் 'வித்யாகாரன்' என்று வர்ணிக்கப்படுகிறார். வித்தைக்கு அதிபதியான புதனைச் சார்ந்த தொழில், படிப்பு போன்றவற்றை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு அதற்கு நட்புக் கிரகத்திற்குரிய எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், வருகிற காலமெல்லாம் வசந்த காலமாக மாறும்.

### குருவின் பார்வை பலத்தால் குடும்ப முன்னேற்றம் கூடும்

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இனி நான்காமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன்பார்வை ஆயுள் ஸ்தானம், தொழில் ஸ்தானம், பயண விரய ஸ்தானத்தில் பதிகிறது. எனவே இடமாற்றத்தால் இனிய மாற்றம், இல்லத்தில் அமைதி, இதுவரை இல்லாத அளவிற்கு தொழிலில் வளர்ச்சி, புதிய ஒப்பந்தங்கள் அதிகரிப்பு ஆகியவை அனைத்தும் வந்து சேரப் போகின்றன.

### உடல் நலம் சீராகும்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கேற்ப உடலை உறுதியாக வைத்துக் கொண்டால் தான் உற்சாகத்தோடு செயல்பட முடியும். கடந்த சில மாதங்களாகவே ஆரோக்கியம் குறையவும், மருத்துவ செலவும் உங்களுக்கு அதிகரித்திருக்கலாம். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய முடியாமல் போயிருக்கலாம். உடம்பு ஒத்துழைத்தால் தானே ஒவ்வொரு காரியமும் செய்ய இயலும். அதற்கான வழிமுறைகளை கையாண்டும் பலனில்லையே என்று ஏங்கியவர்கள் இப்பொழுது மகிழ்ச்சி அடையும் விதத்தில் மாற்று மருத்துவத்தின் மூலம் உடலை குணப்படுத்திக் கொள்ளலாம்.

இடமாற்றம், ஊர்மாற்றம் என்று கேட்டு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு இதுவரை இருந்த தடை இனி அகலும். நினைத்த ஊருக்கே நீங்கள் மாற்றம் காணலாம். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். சொத்து சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தை வாங்கும் வாய்ப்பு உருவாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரும்.

பக்கத்து வீட்டாரின் பகைமைய வளர்த்துக் கொண்ட நீங்கள் இனி, அந்த சிக்கல்களிலிருந்து விலகவேண்டும் என்று முடிவெடுப்பீர்கள். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும். தாயின் வழியே நல்ல தகவல்கள் வந்துசேரும்.

தட்டுப்பாடு இல்லாத வாழ்க்கைக்கு விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. அஷ்டம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பாயில் படுத்தவர்கள் கூட இனி பம்பரமாய் சுழன்று பணி புரிவர். இழப்புகளை ஈடுகட்டும் நேரமிது.

### நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும்

மண்ணை வாங்கலாமா? மனையை வாங்கலாமா? பொன்னை வாங்கலாமா? பொருளை வாங்கலாமா? என்று 24 மணி நேரமும் யோசனையில் ஆழ்ந்திருந்த உங்களுக்கு சுப விரயங்கள் செய்யும் நேரமாக இந்த நேரம் அமையப் போகிறது. விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேர வழி வகுப்பீர்கள்.

நிலையான வருமானம் வந்துசேர நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும். தொழில் வளர்ச்சியில் குறுக்கிட்டவர்கள் விலகுவர். தொகை வந்துகொண்டே இருக்கும். மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்துவீர்கள். அயல் நாட்டு வணிகம் ஆதாயம் தரும். மதிப்பும், மரியாதையும் உயரும். ஆலயங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா காண்பீர்கள்.

### வாகன மாற்றத்தால் வளர்ச்சி!

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. அங்ஙனம் மாற்றும் பொழுது அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் ஏறுவரிசை அமைப்பில் வாகன எண் அமைத்து வாங்கினால் சீரும், சிறப்பும் வந்துசேரும். செல்வ நிலையில் உயர்வு கிடைக்க புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுக் கொண்டே இருக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். கணிசமான தொகை கைகளில் புரண்டு கொண்டே இருக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். கணிசமான தொகை கைகளில் புரண்டு கொண்டே இருக்கும், இந்த நேரத்தில் முற்றிலும் தெரியாத புதிய தொழிலில் ஈடுபட முன்வருவீர்கள். வெற்றிக்குரிய நேரம் இது என்பதால் வியக்கும் விதத்தல் தொழிலில் முன்னேற்றம் கிடைக்கும்.

### பரிகாரம் செய்தால் பலன் கிடைக்கும்!

பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தொழிலில் இதுவரை ஏமாற்றத்தை சந்திக்க நீங்கள் இனி ஏற்றங்களை சந்திக்கப் போகிறீர்கள். தாமாக முன் வந்து உதவி செய்ய, தயங்காமல் நண்பர்கள் வந்துசேருவர். சேமிப்பு உயரும். சிறு சிறு பிரச்சினைகள் வரும்பொழுது மனக் கலக்கம் ஏற்படாமலிருக்க ஜாதகத்தை எடை போட்டு பாருங்கள். சுய ஜாதகத்தில் புதன் மற்றும் குரு இருக்கும் இடத்தையும், அதைப் பார்க்கும் கிரகத்தையும் வைத்து ஆராய்ந்து, அதற்கேற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோக பலம்பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் யோகங்கள் அனைத்தும் வந்து சேரும்.

### மகர குருவால் ஏற்படும் மாற்றம் (23.04.2008 முதல் 04.06.2008 வரை)

தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் ஏப்ரல் மாதம் மகர ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை உங்கள் ராசியின் மீதும் 9,11 ஆகிய இடங்களிலும் பதியப் போகிறது. எனவே நற்பலன்களை அதிகம் காணப்போகிறீர்கள்.

பஞ்சமத்தில் சஞ்சரிக்கும் குரு, பாக்கியங்கள் அனைத்தையும் வழங்கப் போகிறார். மிஞ்சும் படியாக இலாபம் கிடைக் கும். விவாகத் தடை அகலும். வெளியேறிச் சென்ற உறவினர்கள் வீடு வந்து சேருவர். பிள்ளை கள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகும். நீண்ட தூரப் பயணங்கள் உருவாகலாம். குடும்பத்தில் அனைவரது தேவைகளையும் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

### வளர்ச்சியைக் கூட்டும் வாரவழிபாடு

புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வாலில் மணி கட்டிய அனுமனை வழிபட்டால் வாழ்வில் நலம் சேரும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

4இல் சஞ்சரிக்கும் குருவால் நாளும் நற்பலன்கள் வந்துசேர, வைரவன் பட்டியை நோக்கி அடியெடுத்து வையுங்கள் அங்குள்ள வைரவரையும், ஓசை கேட்கும் கற்றூண்களுக்கு இடையில் உட்கார்ந்து அருள் கொடுக்கும் குரு தெட்சணாமூர்த்தியையும் வணங்கினால் பொருள் வளம் பெருகும். புகழும் கூடும்.

### மலை போல் வந்த துயர் பனிபோல் விலகும்

குரு உங்கள் ராசிக்கு 4,7க்க அதிபதியாக விளங்குகிறார். அது தனது சொந்த வீட்டிலிருந்த படியே உங்கள் ராசிக்கு 8,10,12 ஆகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். இருக்குமிடம் சிறப்பான இடம்என்பதால் இடம் வாங்கி வீடு கட்டுவது முதல் கடன் சுமை குறைந்து கவலைகள் நீங்குவது வரை குரு பெயர்ச்சியால் நடைபெறப்போகிறது. ஏழரைச் சனி ஆதிக்கமும் இணைவதால் குடும்பத்தில் மங்கள ஓஸைகேட்க வாய்ப்புகள் கைகூடி வரும்.

மன்னவன் நான்கில் நிற்க
மலைபோல் துயர் வந்தாலும்
கண்ணெதிரில் பனியாய் மாறும்
கடல் பயண வாய்ப்பும் கிட்டும்!
முன்னாளில் இருந்த நோய்கள்
முற்றிலும் விலகியோடும்!
பொன்னான தொழில் தொடங்க
புதியதோர் நண்பர் சேருவர்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்தஅடிப்படையில் நான்காம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு, நலம் திகழும் உடல் வாகை கொடுக்கப்போகிறார். வளர்ச்சி கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதில் இருந்த தடைகள் அகலும். தொழில் ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் தொழில் வளர்ச்சி மேலோங்கவும், எழிலான வாழ்க்கை அமையவும், குரு வழிபாட்டில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

### அக்கறை செலுத்தவேண்டிய வக்ரகாலம் (05.04.2008 முதல் 20.09.2008 வரை)

4,7க்கு அதிபதியான குரு வக்ரம் பெறும் இந்த நேரத்தில் அது நல்லது செய்யுமா என்று நினைக்கவேண்டாம். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும் பொழுது நன்மைகளையே வழங்கும். இருப்பினும் வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் உருவாகலாம். வழிகாட்டியாக இருப்பவர்கள் உங்களை விட்டு விலகுவர். பொருள் விரயம் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கும். இக்காலத்தில் ஜோடி விளக்கேற்றி சுகம் தரும் குருவை வழிபட்டால் வாடும் நிலை மாறி வசந்த நிலை உருவாகும்.

### கன்னிராசிப் பெண்களுக்கு கணவனின் அன்புக்கு பாத்திரமாவர்

இந்த குருப் பெயர்ச்சியால் கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். இருப்பினும் எல்லோரையும் அனுசரித்து செல்வது நல்லது. கணவனின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். காசு, பணம் விரயமாகாமல் தடுக்க, சேமிப்பில் அக்கறைசெலுத்துவது நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்குரிய நகைகளை வாங்குவதும், அவைகளின் எதிர்கால நலன்கருதி ஒரு தொகையை 'டெபாசிட், செய்வதும் நல்லது. உங்கள் பெயரிலேயே வீடு, இடம் வாங்கும் அமைப்பு உருவாகும். மாற்று மருத்துவத்தை மேற்கொண்டால் உடல் நலம் சீராகும். தக்க விதத்தல் குரு வழிபாடு செய்வதாலும், தான் தோன்றீஸ்வரர் இருக்கும் ஆலயத்திற்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவதன் மூலம் வீண் பிரச்சினைகளிலிருந்து நீங்கள் விடுபட இயலும்.

## க.பொ.த. சாதாரண தரம் முன்னோடிப் பரீட்சை

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சின் கணிதம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பிரதான பாடங்களுக்கான வினாத்தாள் வழங்கப்படும்.

இப் பரீட்சை இம்மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. ஏனைய பாடங்களுக்கும் வலய மட்டத்தில் வினாத்தாள்கள் வழங்கப்படவுள்ளன. இப் பரீட்சையின் போது மேற்பார்வையாளராக அருகில் உள்ள பாடசாலை அதிபரை ஒழுங்கு செய்ய வேண்டும். விடைத்தாள் மதிப்பீடு கோட்ட ரீதியாக அமைக்கப்படும் நிலையத்தில் நடைபெறும். உடனடியாகவே புள்ளிப் பகுப்பாய்வு செய்து கோட்டக்கல்வி அதிகாரியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என பரீட்சைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (அ-19)

## ஆண்டிறுதிப் பரீட்சை

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட இடைநிலைப் பிரிவு தரம் 6, தரம்7, தரம் 8, தரம்10ஆகிய வகுப்புகளிற்கான ஆண்டிறுதிப் பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

மேலும் ஆரம்பப் பிரிவுக்கான பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி முதல் வெள்ளிக்கிழமை டிசம்பர் 3 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும் என கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

## தொழிற் திணைக்களக் கூரை சேதம் அலுவலர்களும் பொதுமக்களும் அவலம்

யாழ்ப்பாணம் தொழிற் திணைக்களம் மாரிகாலத்தில்கொட்டும் மழையில் நனைந்தே காணப்படுகின்றது. இவ் அலுவலகம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மூன்றாம் மாடியில் அமைந்துள்ளது. இதன் கூரை உடனடியாகத் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அங்கு கடமையாற்றும் அலுவலர்களும், பொதுமக்களும் பெரிதும் கஷ்டமடைகின்றனர். (அ-19)

## தமிழ் அறிவுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

கடந்த மூன்றாம் திகதி நடாத்தப்படவிருந்த தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தரம்4,5,6 ஆகிய வகுப்பு மாணவர்களிடையே நடாத்தப்பட இருந்த தமிழ் அறிவுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6)

## விண்ணப்பம் கோரல்

உதவி வெடி பொருட் கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சையொன்று பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி எதிர்வரும் 30ஆம் திகதியாகும். இதுபற்றிய தகவல்களை 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். (6)

## ஜேர்மன் தூதரக வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு கொம்பனித் தெருப் பகுதியில் விமானப் படையின் சோதனைச் சாவடிக்கருகில் ஜேர்மன் தூதராலயத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விமானப்படையினரின் உத்தரவைப் பொருட்படுத்தாது சென்ற வாகனத்தின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக கொம்பனித் தெருப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-5)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நாவலர் வீதி வைரவர் கோவிலடியிலும் 2 மணி தொடக்கம் 4மணிவரை 1 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதியிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாகிஸ்தானில் அவசரகால சட்டம் அமுல் நான்கு ஆயிரம் பேர் சிறையில் அடைப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தலில் முஷரப் போட்டியிட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு எதிராக உயர் நீதி மன்றம் தீர்ப்புக் கூறும் என்று எதிர்பார்க்கப் பட்டது.



பாகிஸ்தானில் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து, அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ஜாவத் ஹஸ்மியை முல்தானில் பொலிஸார் கைதுசெய்தனர்.

இதில் இருந்து தப்பிக்க முஷரப் நாட்டில் அவசர கால சட்டத்தை அறிவித்தார். இதைத் தொடர்ந்து நாட்டின் நிர்வாகத்தை இராணுவம் கையில் எடுத்தது.

உயர்நீதிமன்றம் இராணுவ வசம் வந்தது. தலைமை நீதிபதி இப்திகார் சவுத்திரி நீக்கப் பட்டு புதிய நீதிபதி நியமிக்கப்பட்டார். அரசியல் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு வீட்டுக் காவ லில் வைக்கப்பட்டனர்.

அவசரகால சட்டம் 'அமுல்படுத்தியதற்கு முஷரப் நியாயம் கற்பித்துள்ளார். 'நாடு மோசமான நிலையில் சென்று கொண்டிருக் கிறது. இப்போது விட்டு விட்டால் ஒருபோதும் நாட்டை காப்பாற்ற முடியாது. எனவே தான் அவசரகால சட்டத்தைக் கொண்டு வந்துள் ளேன்' என்று முஷரப் விளக்கம் அளித்தார்.

ஆனால் இந்த விளக்கத்தை யாரும் ஏற்ப தாக இல்லை. நாடு முழுவதும் மக்கள் முஷரப் புக்கு எதிராக திரும்பி உள்ளனர். அவர்கள் தெருவில் இறங்கி போராட்டத்தை தொடங்கி யுள்ளனர். கராச்சி, லாகூர், இஸ்லாமாபாத் நகரில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு முஷரப் புக்கு எதிராக கோஷமிட்டபடி தெருக்களில் ஊர்வலமாக சென்றனர். அவர்களை இராணு வத்தினரும், பொலிஸாரும் அடித்துவிரட்டி னார்கள். மீறிப்போராட்டம் நடத்தியவர்களை கைதுசெய்தனர். தெருக்களில் கூட்டமாக நின்றவர்களையும் விரட்டியடித்தனர்.

இதுவரை 500 அரசியல் தலைவர்கள் உட்பட 4ஆயிரம் பேரை இராணுவம் கைது செய்துள்ளது. இவர்களில் அரசியல் முக்கிய தலைவர்கள் மட்டும் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர். மற்றவர்கள் சிறைகளில் அடைக் கப்பட்டுள்ளனர். கைது நடவடிக்கை தொடரும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

லாகூரில் மனித உரிமை அலுவலகம் உள்ளது. அங்கு மனித உரிமை ஆர்வலர்கள் 25 பேர் கூடி ஆலோசனை நடத்தினார்கள். இராணுவம் அங்கு சென்று அவர்களை வெளியேறும் படி கூறியது. அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதனால் அவர்கள் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்தும், தடியடி நடத்தியும் வெளி யேறினார்கள்.

மனித உரிமை அமைப்பு மூத்த நிர்வாகி ஆஸ்மா ஜகாங்கீர் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டார். மேலும் 4 நிர்வாகிகள் கைதுசெய்யப் பட்டனர். நாடுமுழுவதும் வக்கீல்கள் கோர்ட்டு புறக்கணிப்பு போராட்டம் நடத்தினார்கள். இதை யொட்டி வக்கீல் சங்க நிர்வாகிகள் 80பேரை கைதுசெய்து ஜெயிலில் அடைத்தனர்.

பெரும்பாலும் நவாஸ் ஷெரீப் கட்சியைச் சேர்ந்தவர்களை குறிவைத்து இராணுவத் தினர் கைதுசெய்தனர். வீட்டுக் காவலில் வைக் கப்பட்ட முக்கிய அரசியல் தலைவர்களில் கிரிக் கெற் இம்ரான்கானும் ஒருவர். அவர் லாகூரில் உள்ள தனது வீட்டில் இருந்து தப்பித்து ஓட முயன்றார். ஆனால் அவரை கைதுசெய்து வீட்டுக்காவலில் வைத் துவிட்டனர்.



பாகிஸ்தானில் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து அந்நாட்டு முன்னாள் பிரதமர் பெனசிர் பூட்டோ தாயகம் திரும்பினார். கராச்சி விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள் அவரை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பெனாசிர் பூட்டோ இதுவரை கைதுசெய்யப்படவில்லை இருந்தாலும் அவரது வீட்டை சுற்றி 100 இராணுவ வீரர்கள் காவலுக்கு நிற்கின்றனர். பாகிஸ்தானில் தனியார் டி.வி. ஒளிபரப்பு முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. பத்திரிகைகளுக் கும் தணிக்கை முறை கொண்டு வரப்பட்டுள் ளது. இதனால் நாட்டில் என்ன நடக்கிறது என்பது பற்றிய முழுமையான உண்மை நிலை வெளி யே தெரியவில்லை. செல் போன், இன்டர் நெட் தகவல் தொடர்புகளும் துண்டிக்கப்பட் டுள்ளது.

அவசரகால் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடும் கண்டனம் 'தெரி வித்துள்ளார்.

தற்போது சவுதி அரேபியாவில் அடைக் கலம் புகுந்திருக்கும் அவர் பி. பி.சி. தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் 'முஷரப் நாட்டை முற்றிலும் நாசமாக்கிவிட்டார். இந்த நேரத் தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனை வரும் அவருக்கு எதிராக ஓரணியில் திரள வேண்டும். அவரை வீழ்த்தியே தீரவேண்டும். நிச்சயம் அவரை வெற்றிகொள்ள முடியும்என்று கூறினார். பாகிஸ்தானில் அடுத்த மாதம் பாராளு மன்ற தேர்தல் நடப்பதாக இருந்தது. இப்போது அவசரகால சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்ப தால் தேர்தல் ஒரு வருடம் வரை தள்ளிப்போக வாய்ப்பு இருப்பதாக பிரதமர் சவுகத் அலி கூறி யுள்ளார்.

தனக்கு எதிராக கொந்தளிப்பில் ஈடுபட் டுள்ள மக்களை அமைதிப்படுத்தும் முயற்சி யில் முஷரப் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இதுதொடர்பாக அவர் தொலைபேசியில் தோன்றி பேசியதாவது, இப்போது அவசர கால சட்டம் அமுல்படுத்தப்பட்டு இருந்தாலும் இதை அவரசகால சட்டமாக மக்கள் கருதக்கூடாது. நாட்டை ஒழுங்குபடுத்த கொண்டுவரப்பட்ட தேவையான சட்டமாக கருதவேண்டும்.

மக்களுக்கு எதிராக அரசு எந்த நடவடிக் கையும் எடுக்காது. தவறு செய்பவர்களை ஒடுக்கி நாட்டை முன்னேற்றவே இந்த முடி வை எடுத்துள்ளோம். இதைத் தவிர வேறுவழியே இல்லை எனவே மக்கள் குழு ஒத்துழைப்பு தரவேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

# இறந்ததாகக் கருதப்பட்டவர் மீண்டுவந்தார்

(லண்டன்)

இங்கிலாந்தில் கிரேட் மான்செஸ்டர் பகுதி யைச் சேர்ந்தவர் கினா பார்ட்டிங்டன் (வயது 58). இப் பெண்ணின் மகன் தாமஸ் டென்னிசன் (வயது37) கடந்த மாதம் திடீரென்று காணாமல் போய்விட்டார். அதன்பிறகு 3 நாட்கள் கழித்து, மான்செஸ்டர் பகுதியில் ஒரு பிணம் கண்டெ டுக்கப்பட்டது.

கினா பார்ட்டிங்கனை கூட்டிச் சென்று காண்பித்தபோது, அது தனது மகன் பிணம் தான் என்று அடையாளம் காட்டினார். கடந்த 30ஆம் திகதி பிணம் தகனம் செய்யப்பட்டது.

இதற்கிடையே, தாமஸ் டென்னிசன் உயிரு டன் திரும்பிவந்தார். அடையாளம் தெரியாத பிணத்தை தகனம் செய்வதற்கு 4 நாட்களுக்கு முன்பே, நாட்டிங்காம் பகுதியில் தாமஸ் டென்னிசன் உயிருடன் நடமாடுவதை பொலி ஸார் பார்த்துள்ளனர்.

இருப்பினும் அதை அவரது தாயாரிடம் சொல்லாமல் மறைத்துவிட்டனர். எதற்காக அப்படிச் செய்தனர் என்று விசாரணை நடந்து வருகிறது. (அ-5)

# மனித மொழியைப் புரிந்துகொண்ட முதல் சிம்பான்சி மரணம்



(வாஷிங்டன்)

மனிதர்களுடன் சைகைமொழியில் பேச பழக்கப்பட்ட முதல் பெண் சிம்பான்சி குரங்கு இறந்துவிட்டது. இது அமெரிக்காவில் உள்ள ஆராய்ச்சி யாளர்களுக்கு மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது. குரங்கில் இருந்து பிறந்த வன் தான் மனிதன் என்பது டார்வின் தத்துவம்.

அதே நேரத்தில் மனிதனுடன் குரங்கு பேச முடியுமா என்ற ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் இறங்கினர். அமெரிக்காவில் நெவாடா மாகாணத்தில் உள்ள சிம்பான்சி மற்றும் மனித தகவல் பரிமாற்றம் நிறுவனத் தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் '1980 ஆம் ஆண்டு ஒரு பெண் சிம்பான்சி குரங்கு குட்டியை தேர்ந்தெடுத்து வளர்க்க தொடங்கினர். அந்த சிம்பான்சிக்கு 'வஷ்' என்றும் பெயரிட்டு அழைத்து வந்தனர். சைகை மொழியில் தகவல் பரிமாற் றம் செய்ய அந்த சிம்பான்சி பல ஆண்டுக ளாக பழக்கப்படுத்தப்பட்டது.

நாளடைவில் விஞ்ஞானிகளின் சைகை யைப் புரிந்துகொண்டும், அதற்கு உரிய வகையில் செயல்படவும், பதில் அளிக்கவும் 'வஷ்' நன்கு பயிற்சி பெற்றுவிட்டது. மேலும், உலகளவில் 'வஷ்' வுக்கு பல மனித நண் பர்களும் உருவாகினர்.

'வஷ்' 1 ஆம் திகதி இரவு உடல் நலம் சரியில்லாமல் இறந்து விட்டது. இதற்கு வயது 42 . 'வஷ்' வின் மறைவு. அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. 'வஷ்' நினை வாக வரும் 12 ஆம் திகதி ஒரு நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இயற்கைக்கு மரியாதை அளிக்கவேண்டும் என்பதை நமக்கு தெரியப் படுத்த ஒரு தூதராக வந்தாள். 'வஷ்' ஏராள மான வர்களிடம் அவள் மிகவும் அன் பாகப் பழகினாள். அவளை நாங்கள் இழந்துவிட் டோம் என்று விஞ்ஞானிகள் சோகத் துடன் தெரிவித்துள்ளனர்.

'வஷ்' வின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த தனியாக ஒரு இணையதள முகவரி ஏற்படுத் துப்பட்டுள்ளது. அதில் 'மனித மொழியைப் புரிந்து கொண்ட முதல் சிம்பான்சி 'வஷ்' தான். தனது வளர்ப்பு மகனுக்கும் அந்த மொழியை அவள் கற்றுக்கொடுத்தாள். 'வஷ்' மிகவும் தனித் தன்மை வாய்ந்தது' என்பது உட்பட பல உருக்க மான தகவல்களை பலர் அந்த இணைய தள முகவரியில் வெளியிட்டு வருகின்றனர். (அ-5)

# ஜேர்மனியில் 700 ஆண்டு பழமையான தேவாலயக் கட்டடம் இடமாற்றம்

(பெர்லின்)

ஜெர்மனி நாட்டில் 700 ஆண்டு பழமை யான தேவாலயத்தை பெயர்த்து எடுத்து லொரியில் ஏற்றிசென்று இடமாற்றம் செய் கிறார்கள்.

**பழமையான தேவலாயம்**

கிழக்கு ஜெர்மனியில் ஹெஸ்டாப் கிராமத் தில் 1297ஆம் ஆண்டு கட்டப்பட்ட மிகப் பழமையான தேவாலயம் உள்ளது. இது ரோமன் கட்டி கலைப்படி கட்டப்பட்டுள்ளது. கற்களால் ஆன இந்தக் கட்டடத்தின் உச்சியில் சிறிய கறுப்புநிற கோபுரம் உள்ளது.

இந்தத் தேவாலயம் அமைந்துள்ள இடத் தில் பழுப்பு நிலக்கரி அதிகமாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அங்கு 5 கோடி டன் அளவுக்கு நிலக்கரியை தோண்டி எடுத்து, மின்சார உற்பத் திக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டது.

இதற்காக, அந்தக் கிராமத்து நிலங்களை கையகப்படுத்தவும், தேவாலயத்தை இடமாற் றம் செய்யவும், மாநில அரசு திட்டமிட்டது. இதற் காக அந்தக் கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசின் முடிவை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். பல ஆண்டு களாக நடந்த இந்த வழக்கில், கடந்த 2005 ஆம் ஆண்டு அரசுக்கு ஆதரவாக தீர்ப்பு வந் தது. இதையடுத்து, கிராம மக்களுக்கு மாற்று இடம் வழங்கப்பட்டது. அவர்கள் அங்கு போய் குடியேறினர். இதையடுத்து, தேவாலயத்தை இடமாற்றம் செய்வதற்கு ரூ 17கோடி வழங் கப்பட்டது. தேவாலயத்தை 12 மைல் தொலை வில் உள்ள போர்னா என்ற கிராமத்தில் உள்ள மார்ட்டின் லூதர் சதுக்கத்தில் போய் வைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அந்தப் பழமையான தேவாலயத்தை அப்படியே பெயர்த்து எடுத்து டிரெய்லர் லாரியில் ஏற்றி வைத்தார்கள். தேவாலயம் 65 அடி உயரமும், 48 அடி நீள மும் கொண்டது. அதன் எடை 750டன். இவ்வ ளவு பெரிய தேவாலயத்தை பெர்த்து எடுத்து டிரெய்லர் லாரியில் வைத்தனர்.

கடந்த வியாழக்கிழமை, தனது புதிய இடம் நோக்கி தேவாலயம் புறப்பட்டது. மிகவும் மெது வாகவே டிரெய்லர் லாரி இயக்கப்படுகிறது. நாளை புதன்கிழமை அந்த தேவாலயம், போர்னா கிராமத்தை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு மார்ட்டின் லூதர் சதுக்கத்தில் அந்த தேவாலயம் வைக்கப்படு கிறது. (அ-5)

## உலக தரிசனம்

# உடல் சோர்ந்தாலும் மனம் சோராத கேரள சிறுமி கவிதைகள் எழுதிச் சாதனை

(கொல்லம்)



கடுமையான நோயால் அவதிப்படும் சிறுமி பதினொரு வயதுக்குள் 'ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் எழுதி சாதனை புரிந்துள்ளார்.

கேரள மாநிலம் கொல்லம் அருகே கலைக் கோடு அரசுப் பள்ளி மாணவி அஜிஷா. பிறக்கும்போதே 'செரிபரல் பார்சி' எனும் மூளைச் செயலிழப்பு நோயால் பாதிக்கப்பட்டவர். நோயால் உடல் 90 சதவீதம் தளர்ந்து விட்டது. அவர் மனம் தளர்ந்துவிடவில்லை. முழு உற்சாகத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆயிரத்து 47 கவிதைகள் எழுதிவிட்டார். ஆசிரியர் களும் இவரை உற்சாகப்படுத்துகின்றனர். இவர் அமர்ந்து எழுத வசதியாக பிரத்தியேக நாற்காலி கொடுக்கப்பட்டிருக்கிறது. உடல் தளர்ந்த போதும், உள்ளம் தளராமல் உழைத்து வரும் சிறுமி பற்றி டில்லி கல்வி இயக்குநரகத்துக்கு தெரியவந்தது. சிறுமியின் தன்னம்பிக்கையை போற்றும் வகையில் அவர் பற்றிய ஆவணப் படம் ஒன்றை இயக்குநரகம் தயாரித்துள்ளது. இந்தப் படம் நோயால் வாடிக் கிடக்கும் பிஞ்சு களின் இளம் மனதை வருடி புதிய தெம்பூட்டும் என்று மத்திய அரசின் கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது. (அ-5)

# பற்சுகாதாரம்

ஆரோக்கியமான வாழ்விற்கும் அழகான புன்னகைக்கும் பற்கள் பிரதானமானவை. எனவே பற்களைப் பேணிப் பாதுகாத்தல் இன்றியமையாதது. பற் சுகாதாரத்தை முழுமையாகப் பேணுவதன் மூலம் பற்சூத்தை, முரசுநோய் என்பவற்றிலிருந்து எம்மை முழுமையாகப் பாதுகாக்க முடியும். எனவே ஒவ்வொருவரும் பற்சுகாதாரம் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்.


*பற்களின் முக்கியத்துவம்*

1. உணவை நன்றாக அரைத்து சாப்பிடுவதற்கு (இதனால் சமிபாடு இலகுவாக்கப்படுகிறது.
2. சொற்களை நன்றாக உச்சரித்து கதைப்பதற்கு.
3. அழகான புன்னகைக்கும் முகத்தின் அழகிற்கும்.

எமது வாழ்க்கைக் காலத்தில் இரண்டு தடவைகள் பற்கள் முளைக்கின்றன.

1. பாற்பற்கள்:- இவை மொத்தம் 20 ஆகும். இவை குழந்தை பிறந்து 6 மாதம் முதல் 6 வயதுவரை காணப்படும். 6 வயது தொடக்கம் 11 வயதிற்குள் இப் பாற்பற்கள் விழுந்து நிரந்தரமான பற்கள் தோன்றும். பாற்பற்களை அவை தானாக விழும் வரை பாதுகாத்தல் நல்ல நிரந்தரமான பற்களை உரிய இடத்தில் பெறுவதற்கு வழிவகுக்கும்.

2. நிரந்தரப் பற்கள்:- இவை மொத்தமாக 32 ஆகும். இவை முழுவதும் 6 வயது தொடக்கம் 24 வயதிற்குள் முளைத்துவிடும். முதுமை அடைந்தால் பற்கள் விழுந்துவிடும் என்பது ஒரு தவறான கருத்தாகும்.




*பற்கள் சம்பந்தமான பொதுவான நோய்களாவன,*

1. பற்சூத்தை
2. முரசுநோய்
3. ஒழுங்கற்ற பல்வரிசை (பல்விழுப்பு, நெத்திப்பல், பற்களிற்கிடையே இடைவெளி)

*பற்சூத்தை எவ்வாறு ஏற்படுகின்றது?*

இனிப்புப் பதார்த்தங்களை உட்கொள்வது இதற்குரிய பிரதான காரணமாகும். அதிலும் ஒட்டும் தன்மையுள்ள இனிப்பு வகைகளை உட்கொள்வது மிகவும் தீமைதரக்கூடியது.

வாய்க்குழியில் காணப்படும் பக்றீரியாக்களினால் பற்களிற்கிடையே தேங்கியுள்ள உணவுத்துணிக்கைகள், பற்களில் ஒட்டியுள்ள இனிப்புப் பதார்ததங்கள் தாக்கப்பட்டு அமிலம் உருவாகின்றது. இவ்வமிலம் பற்களின் வெளிப் புறப்படையான பல்மிளிரியைக் கரைக்கின்றது. இதனால் பற்களில் குழிகள் தோனறுகின்றன. இச் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்று பின்னர் பல் மச்சைப் பகுதி பக்றீரியாவினால் தாக்கப்பட்டு அழற்சி ஏற்படுகிறது. இது பல் வலியை ஏற்படுத்துகிறது.

தொடர்ந்து பல்மச்சை பழுதடைந்து சிதைவடைவதால் சீழ் ஏற்படுகிறது. இது பல் வேரினூடாக தாடை என்புகளிற்கும் பரவி அங்கும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் தாடைகளில் வீக்கம் ஏற்படும்.

*பற்சூத்தையின் அறிகுறிகள்*

1. ஆரம்பநிலையில் வெண்ணிறமான அல்லது மண்ணிறமான புள்ளிகள் தோன்றும்
2. பற்களில் குழிகள் தோன்றுதல்
3. குளிரான பதார்த்தங்களை உணணும்போது பல் கூசுதல்
4. பல்வலி

*முரசுநோய்*

முரசுநோயின் முக்கிய காரணி நுணகிருமிகள் பூசசு 'பிளாக்' (Plaque) ஆகும். பற்களிற்கிடையிலும் முரசின் விளிம்பிலும் உள்ள உணவுத் துணிக்கைகளுடன் நுண்கிருமிகள் சேர்வதால் இது உருவாகிறது.

இந்த Plaque இல் உள்ள நுண்ணங்கிகளிலிருந்து வரும் நச்சுத்தன்மையுள்ள பதார்த்தத்தினால் முரசு தாக்கப்பட்டு முரசு அழற்சி (Gingivitis) ஏறபடுகிறது. இந்த Plaque ஆரம்பத்தில் மென்மையானதும், மெல்லிய மஞ்சள் நிறமானதும் ஒட்டும் தன்மையுடையதுமாகும். இது தூரிகை கொண்டு பல்துலக்குவதால் அகற்றப் படக்கூடியதாகும்.

நாளடைவில் இப்பூச்சு அகற்றப்படாவிட்டால் கடினமாகி கல்சியப்படலமாகின்றது (Calculus or tartar) இது பல்வைத்தியரிடம் சென்று அகற்ற முடியும். இந் நிலையில் சிகிச்சை பெறாவிட்டால் கிருமித்தொற்று என்புகளிற்கு பரவி அங்கு சீழ் உருவாகத் தொடங்கும். அத்துடன் என்பும் அரிபட்டு பற்கள் ஆடி விழுந்துவிடும். இதை periodontitis or pyorrhoea என்பர்.

*முரசு வியாதியின் அறிகுறிகளாவன*

1. முரசிலிருந்து இரத்தம் வருதல்
2. முரசு வீங்குதல்
3. முரசு வலி
4. முரசு கடும் சிவப்பு நிறமாக காணப்படுதல்
5. வாயிலிருந்து துர்நாற்றம் வீசுதல

*பற்சூத்தை, முரசுநோய் என்பவற்றால் ஏற்படும் விளைவுகள்*

1. பற்களை இழக்க நேரிடலாம்
2. இதனால் உணவை மென்று சாப்பிடுவதில் சிரமம் ஏற்படும்
3. பேசுவதில் சிரமம் ஏற்படும்
4. பற்கள் நிறம்மாறி உடைவதால் அவற்றின் அழகினை இழத்தல்
5. வாயிலிருந்து துர்நாற்றம் வீசுதல
6. பல்வலி உண்டாவதால் கற்றலில் கவனம் குறைதல்
7. பற்களைப் பிடுங்குவதால் மிகுதிப் பல்வரிசைஒழுங்கில் மாற்றம் ஏற்படலாம்.
8. பக்றீரியா குருதியில் சேர்வதால் இருதயநோய் (Endocarditis) போன்ற உயிர்கொல்லி நோய்கள் ஏற்படலாம்.

அ.அருட்செல்வன்
மருத்துவ மாணவன் (4ஆம் வருடம்)
யாழ். பல்கலைக்கழகம்.

9. வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கு வாய்ச்சுகாதாரம் பேணப்படாமை ஏதுவாக அமைகின்றது.

(தொடரும்)

# முதுகு தண்டுவடமுறிவைச் சரிசெய்ய "பயோ சிமெண்ட்" கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

முதுகு தண்டுவட முறிவை சரிசெய்ய, பயோ சிமெண்ட் பயன்படுத்தலாம். அறுவை சிகிச்சை செய்யாமல் ஊசி மூலம் திரவமாக இதை செலுத்தி எலும்புகளைச் சேர்க்கலாம். என்று அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் ஆய்வில் கண்டு பிடித்துள்ளனர்.




## மருத்துவ விளக்கம்

இது குறித்து அமெரிக்க லீட்ஸ் பல்கலைக் கழக எலும்பியல் சிகிச்சை நிபுணர்கள் கூறியதாவது, உலோக தகடு பொருத்தி ஸ்குரு பயன் படுத்தி, எலும்புகளை இணைக்கப்பட்டும் வந்தன.

இப்போது சிமெண்ட் பயன்படுத்தப் படுகிறது. அறுவை சிகிச்சை செய்து தான் சிமெண்டை பயன்படுத்தி, எலும்புகளைச் சேர்க்க வேண்டும்.

என்பதில்லை. பாதிக்கப்பட்ட எலும்பு பகுதியில் ஊசி மூலம் சிமெண்டை செலுத்தி எலும்புகளைச் சேர்த்து வைக்கலாம் எந்த செயற்கை பொருட்களும் சேர்க்காமல் இயற்கையான சாதனங்களை கொண்டு இந்த சிமெண்டை தயாரிக்கலாம். இப்போது நடைமுறையில் உள்ளசிமெண்ட் மற்றும் உலோக தகடு பொருத்தும் சிகிச்சையைவிட இது சுலபமானது.

நீண்ட காலத்துக்கு பாதுகாப்பானது. இவ்வாறு நிபுணர்கள் கூறியுள்ளனர். பயோ சிமெண்ட் தயாரிப்பதற்காக அமெரிக்க இன் ஜினி'யரிங் மற்றும் அறிவி யல் ஆய்வு கவுன்சில், பல நூறு கோடி ரூபாய் செலவில் தனி தொழிற் சாலை உருவாக்க ஏற்பாடு செய்து வருகிறது. தனியார் நிறுவனத்திடம் இந்த பொறுப்பை விட தீர்மானித்துள்ளது. மூட்டு வலி, மூட்டு தேய் மானம் போன்ற பாதிப்புள்ள நோயாளி களுக்கும் இந்த பயோ சிமெண்ட் சிகிச்சையை செய்யலாம்.

இறுதிக்கட்ட ஆய்வை முடித்தவு டன், வர்த்தக ரீதியாக இந்த ''பயோ சிமெண்ட்'' பயன்படுத் தப்படும் என்றும் நிபுணர்கள் கூறினர்.

# சிசேரியன் மூலம் குழந்தை பிரசவிக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இருமடங்கு கவனிப்பு தேவைப்படுகிறது

(புதுடில்லி)

சாதாரணமாக குழந்தை பிரசவிக்க வாய்ப்பிருந்தும், தேவையின்றி சிசேரியன் மூலம், குழந்தை பிரசவிக்கும் பெண்கள், குழந்தை பிறந்த் பிறகு மற்றவர்களைவிட இரு மடங்கு உடல்நலம் பாதிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் மரணம் கூட ஏற்படுகிறது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த குழு வினர் இது தொடர்பாக நடத் திய விரிவான ஆய்வில் இது தெரியவந்துள்ளது. ஆய்வுக் குழு கண்டுபிடித்துள்ள தகவல்கள் சாதாரணமாக பிரச வம் ஏற்பட வாய்ப்பு இருந் தும், பிரசவ வலியை தாங்க பயந்து கொண்டு சிசேரியன் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே போல, ஜாதகத்தின் மீது நம் பிக்கை கொண்டவர்கள், குறிப்பிட்ட திகதி மற்றும் மணிக்கு சிசேரியன் மூலம் குழந்தையை வெளியில் எடுக்க விரும்புகின்றனர். ஆரம்ப காலத்தில் பிரசவத் தின் போது. 5 சதவீதமாக இருந்த சிசேரியன் பிரசவம், தற்போது 65 சதவீதமாக அதிகரித் துள்ளது. சிசேரியன் மூலம் குழந்தை பிரசவிப் போர் மற்றும் பிறக்கும் குழந்தைகளின் 70 சத வீதத்தினர் கடும் அபாய நிலையை சந்திக்க நேரிடுகிறது. சாதாரணமாக பிரசவிப் பவர்களை விட இவர்களுக்கு கடும் காய்ச் சலும், உடல் நலக்குறைவும் ஏற்படுகிறது. இவர்களுக்கு மரணம், கருப்பை அகற்று தல், ரத்தம் செலுத்த வேண்டிய நிலையை சந்திக்க நேரிடுகிறது. சாதாரணமாக பிரசவிப்ப வர்களை விட இவர்களுக்கு கடும் காய்ச் சலும், உடல் நலக்குறைவும் ஏற்படுகிறது. இவர்களுக்கு மரணம் கருப்பை அகற்றுதல், ரத்தம் செலுத்த வேண்டிய நிலை தீவிர கண் காணிப்பு பிரிவில் வைத்திருந்து சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட அபாயங்கள் ஏற்படுகின் றன. சிசேரியன் மூலம் பிரசவிக்கும் பெண் களுக்கு மற்றவர் களைவிட ஐந்து மடங்கு நோய் எதிர்ப்பு மருந்து அளிக்கப்படுகிறது.



இதனால் கடும் எதிர்விளைவுகள் ஏற்படும் அபாயமும் உள்ளது. சாதாரணமாக தலை முதலில் வெளிவந்து பிரசவமாகும். குழந்தை களைவிட சிசேரியன் மூலம் எடுக்கப்படும் குழந்தைகள் இரண்டு மடங்கு தீவிர கண் காணிப்புப் பிரிவில் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் நிலை ஏற்படுகிறது.




யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமூதாய மருத்துவத்துறையின் ஏற்பாட்டில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆஸ்த்மா நோய் தொடர்பான கருத்தரங்கிலும் நூல் வெளியீட்டு விழாவிலும் நூலாசிரியரும் நாலாம் வருட மருத்துவபீட மாணவனுமாகிய இ.முரளிதரன், வைத்திய கலாநிதி என்.சிவராஜா, வைத்திய கலாநிதி கெள்ரி செல்வரத்தினம், வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர், வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா ஆகியோர் உரையாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- யதார்த்திகன்

> பெரும்பாலான மனிதர்களை நம்பிக்கைதான் பாதுகாத்து வாழ்க்கையில் நிற்கவைக்கிறது.
>
> – கிரீஸ்

வலம்புரி

## அரசியல் பழிதீர்க்கும் தமிழகத்தில் அலசப்படும் ஈழத்தமிழர் அவலம்

தமிழ் நாட்டின் அரசியல் கலாசாரம் நாளுக்கு நாள் அநாகரிகப்பட்டுச் செல்வதை பார்க்கும்போது வேதனைப்படாமல் இருக்க முடியாது.

ஆட்சியைப் பிடிப்பதற்கும் அதனைக் கவிழ்ப்பதற்குமான படலமாக ஈழத்தமிழர் விடயம் தமிழகத்தில் கையாளப்படுவது வெட்கத்திற்கும், வேதனைக்குமுரியதாகும்.

ஈழத்தமிழர்கள் தமது சொந்த மண்ணில் படும் அவலம் சொல்லுந்தரமன்று. ஆட்சியாளர்களின் இனத்துவரீதியான பேதமையால் ஈழத் தமிழர்கள் தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழமுடியாமல் உள்ளனர்.

அகதிகளாகப் படும் அவலம் ஒருபுறம். உள்ளதையெல்லாம் இழந்து தமிழகத்திற்குச் சென்று அங்கு வாழலாம் என்றால் அதற்கும் தடை. தடையை மீறிப் பயணித்தவர்கள் மீனுக்குத் தீனியாகப் போனசோகம் பல.

இவற்றையெல்லாம் அறியாத தமிழகமும், அரசியல்வாதிகளும் இருக்க முடியாது. இருந்தும் ஈழத்தமிழர் விடயத்தில் இருவேறு போக்கை தமிழகத் தலைவர்கள் கடைப்பிடிப்பது ஏன்? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒருபோதும் தமிழகத்தை எதிர்க்கவில்லை. தமிழகத்து மக்கள் தம் உடன்பிறப்பு என்றும் அவர்கள் தமக்கு உதவுகரமாக இருப்பார்கள் என்ற நினைப்பிலிருந்தும் விடுபட்டதில்லை.

ஆனால் தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் சிலர், ஈழத்தமிழர் விடயத்தை தமது அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்துவது தமிழினத்துக்கே இழுக்கை ஏற்படுத்துவதாகும். அண்மையில் சுட, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கவலை தெரிவித்து கவிதைப் பாவினால் அஞ்சலி செலுத்தியிருந்தார்.

கலைஞர் மட்டுமன்றி வை.கோபாலசாமி,டாக்டர் ராமதாஸ், திருமாவளவன், பழ.நெடுமாறன், வீரமணி போன்றவர்களும் தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். ஆனால் கலைஞர் கருணாநிதி செலுத்திய அஞ்சலியை செல்வி ஜெயலலிதா தனது அரசியல் இலாபத்திற்காக முன்னிலைப்படுத்துவது நாகரிகமானதல்ல.

ஜெயலலிதாவின் இந்தப் போக்கு கலைஞர் கருணாநிதியை பாதிக்குமோ இல்லையோ ஆனால் உலகுவாழ் தமிழர்களின் ஒற்றுமைக்கு அது குந்தகமாக அமையுமென்பது சர்வநிச்சயம்.

தமிழர்கள் ஒற்றுமையுடன் இருக்கின்றார்கள், ஈழத்தமிழர்களுக்கு ஏதேனும் அவலம் நடந்தால் அதனை தமிழகம் பார்த்துக் கொண்டிராது என்ற நினைப்பு தேவையானதாகும். அது இல்லாது போகும்போது இலங்கையில் தமிழர்களின் இருப்பு அவலப்படும் நிலைக்கு தள்ளப்படும். இதுவே உண்மை.

இந்த உண்மையை மறந்து சொந்த அரசியல் இலாபத்திற்காக அநாகரிகமான முறையில் பேசுவதை ஜெயலலிதா மட்டுமன்றி சோ மற்றும் சுப்பிரமணியசுவாமி, மூப்பனார் வாசன் போன்றவர்களும் கைவிடவேண்டும். ஒருவரின் மறைவுக்கு விடுக்கப்படும் அஞ்சலி என்பது மனித நாகரிகத்துடன் சம்பந்தப்பட்டது.

அவற்றையெல்லாம் தூக்கி துலாம்பரப்படுத்த முற்படுவது மனித நாகரிகத்தை உடைத்தெறிவதற்கும் இன ஒற்றுமையை சீர்குலைப்பதற்குமே உதவுமல்லாமல் வேறுபயன் ஏதுமில்லை.

# மணலாற்றில் புதிய களமுனையை திறக்க படையினர் முயற்சி

## த நேசன் தெரிவிப்பு

முல்லைத்தீவில் தமது அடுத்த களமுனையை இலங்கை இராணுவம் திறக்கலாம் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் த நேசன் வார ஏடு தனது பாதுகாப்பு ஆய்வில் தெரிவித்துள்ளது. அந்த ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மரணமடைந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மூன்று நாட்களுக்கு துக்கம் அறிவித்துள்ளனர். எனவே விடுதலைப் புலிகள் (திங்கட்கிழமை வரையிலும்) எந்த தாக்குதல்களிலும் ஈடுபடமாட்டார்கள், ஆனால் படையினரின் நடவடிக்கைகள் நிறுத்தப்படப்போவதில்லை.

வடபகுதியில் பல பகுதிகளில் மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கைகளை கருதினால் அதில் முகமாலை, நாகர்கோவில், அச்சு, மன்னார், மடு ஆகிய பகுதிகளில் ஏதாவது ஒன்றில் பெருமெடுப்பிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

அதேசமயம் மணலாற்றில் உள்ள ஜனகபுர பகுதிக்கு அண்மையில் உள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் மீது வான் படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இது அந்தப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை பலவீனப்படுத்தும் முயற்சியாகும்.

எனவே படையினர் முல்லைதீவில் தமது அடுத்த களமுனையை திறக்கலாம். முல்லைத்தீவு பகுதி மீது கடுமையான வான் தாக்குதல்களுக்கு மத்தியில் இராணுவத்தினரின் ஏழாவது விஜயபா இலகு காலாட்படை ரெஜிமெண்ட் கடந்த வியாழக்கிழமை கடும் எறிகணை வீச்சுக்களுடன் முகமாலை முன்னரங்கு மீது கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஏழாவது கஜபா ரெஜிமெண்ட் படையினரும் முகமாலை முன்னரங்கில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். வவுனியா-மன்னார் வீதியிலும் படை யினர் இரு திசைகளில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

18 ஆவது கஜபா ரெஜிமெண்ட் படையினர் ஒருமுனையிலும் 8 ஆவது கஜபா ரெஜிமெண்ட் படையினர் மறுமுனையிலும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது படையினர் விடத்தல் தீவை கைப்பற்றுவதை தடுக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் கடுமையான பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

கட்டுக்கரைக்குளம் பகுதிக்கு வடமேற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் இருபடையினர் கொல்லப்பட்டதுடன் 12 படையினர் காயமடைந்ததாக அரசு தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் ஒரு மேஜர் தர அதிகாரியும் ஒரு குவாடர் மாஸ்டர் தர அதிகாரியும் அடக்கம்.

ஆனால் 25 படையினர் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் 7 பேர் பலியானதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியாக மோதல்களில் ஈடுபடும் நோக்கத்துடன் 57 ஆவது படையணி உருவாக்கப்பட்டிருந்தது.

அப்படையணியின் கட்டளைத்தளபதி மாற்றப்பட்ட போதும் அது கடந்த 7 மாதங்களாக மோதல்களில் ஈடுபட்டு வருகிறது. அதன் கட்டளைத்தளபதியாக பிரிகேடியர் ஜெகத் டயஸ் தற்போது பணியாற்றி வருகிறார்.

இதனிடையே 58 ஆவது படையணியின் கட்டளைத்தளபதியான பிரிகேடியர் சார்லி கலகே திடீரென ஏற்பட்ட கடுமையான சுகவீனம் காரணமாக கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது படையினருக்கு தற்காலிக பின்னடைவாகும். அவரது இடத்திற்கு பிரிகேடியர் சவெந்திரா சில்வா தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். சார்லி கலகே கடந்த படை நடவடிக்கைகளில் கொமொண்டோ பிரிகேட்டை வழிநடத்தியிருந்தார்.

இவரது வழிநடத்தலிலேயே படையினர் சிறு குழுக்களாக விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவல் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் பின்னர் படையினர் வன்னியின் ஓமந்தைக்கு மேற்காகவுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர். ஆனால் அதில் அவர்கள் வெற்றிபெறவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## போர்த் தர்மங்களை மீறி தமிழ்ச்செல்வன் கொலை செய்யப்பட்டுள்ளார்

### இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவிப்பு

ஈழத்தமிழரின் துயரை அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் உலகுக்குத் தெரிவித்துவந்த பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன், போர் தர்மங்களை மீறி கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டின் திருவாரூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது,

ஈழத்தில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அழிக்கத் துடிக்கும் இலங்கை அரசைப் பற்றியும் தமிழ் மக்களின் துயரங்களைப் பற்றியும் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பிறகு உலகுக்குத் தெரிவித்த போராளி தமிழ்ச்செல்வன் போர் தர்மங்களை மீறி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்குத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக இரங்கலும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். அ.தி.மு.க கூட்டணியில் இருக்கும் வை.கோவும் கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழ்ச்செல்வன் மறைவுக்கு முதல்வர் கருணாநிதி எழுதிய இரங்கல் கவிதைக்கு அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா அம்மையார் கண்டனம் தெரிவித்துள்ளார். இவரை தமிழக மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் என்ன உறவு? இவரை தலைவராக ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள் வெட்கப்படவேண்டிய-வேதனைப்பட வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது என்றார் கனிமொழி. (அ-5)

## கிழக்கிலுள்ள இரு மாவட்டங்களில் பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு!

### தமிழ்மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் புதிதாக பொலிஸ் உத்தியோகஸ்தர்களை சேர்த்துக் கொள்ள பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஜயந்த விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

இப்பிரதேசங்களில் சேவையாற்றுவதற்கு தமிழ்மொழி தெரிந்த உத்தியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான நேர்முகப் பரீட்சையின்போது தமிழ்மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் .

இப்பகுதியிலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகியோரில் தகுதி பெற்றவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம். இப்பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10 ஆம் திகதிதொடக்கம்14 ஆம் திகதிவரை நடைபெறும். விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொலிஸ் நிலையங்களை அரசு அமைத்துள்ளது. மன்னார் சிலாவத்துறைப் பகுதியிலும் புதிய பொலிஸ்நிலையங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மெட்ரோ நியூஸ் செய்தியாளர் பொலிஸாரால் தடுத்து வைப்பு

வீரகேசரி பத்திரிகை நிறுவன வெளியீடான மெட்ரோ நியூஸ் செய்தியாளர் எம்.ஏ.பாஹிம், படப்பிடிப்பாளர் எம்.எஸ்.சலீம் மற்றும் வாகனச் சாரதி கருப்பையா இராஜேந்திரன் ஆகியோர் கொம்பனித் தெருப் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலே வீதியில் உள்ள குடியிருப்புப் பகுதி குடியிருப்பாளர்களின் அவல நிலைபற்றி செய்தி சேகரிக்கச் சென்ற வேளையில் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, கொம்பனித் தெருப்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இராணுவத் தளபதி வவுனியா விஜயம்

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த சனிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளைப் பார்வையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விஜயத்தின் போது அங்குள்ள பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய்ந்துள்ளதுடன் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பான மேலதிக ஆலோசனைகளையும் இராணுவத் தளபதி வழங்கியுள்ளார். வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் டபிள்யு.யூ.பி.எதிரிசிங்க இராணுவத் தளபதியை வரவேற்றார். அதன் பின்னர் வன்னிப் பிராந்தியத்துக்கான படைத் தலைமையகத்தில் அப்பிராந்தியத்தின் படையணிகளினதும் படைப் பிரிவுகளினதும் கட்டளை அதிகாரிகளையும் இராணுவத் தளபதி சந்தித்து பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது கட்டளை அதிகாரிகள் தங்களுக்குரிய பிரதேசங்களின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து இராணுவத் தளபதிக்கு விளக்கமளித்துள்ளனர். அதன் பின்னர் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கான மேலதிக ஆலோசனைகளை இராணுவத் தளபதி அவர்களுக்கு வழங்கினார் எனவும் அச்செய்திகளில் குறிப்பிட்டுள்ளன. (அ-5)

# படுகொலை குறித்த பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்வோர் கொலை நடந்த மூன்று மாதத்திற்குள் கொலை தொடர்பாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

பதிவை மேற்கொள்ள வரும் போது மரணச் சான்றுகள் உள்ளிட்ட ஏனைய ஆவணங்கள், சட்ட வைத்திய அதிகாரியின் மரண விசாரணை அறிக்கை, நீதிவான் நீதிமன்ற அறிக்கை, திருமணம் ஆனவரானால் விவாகச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இவற்றை உடனடியாக சமர்ப்பிக்க முடியாதவர்கள் காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு புறம்பான முறையில் மேற்கொள்ளப்படும் கொலை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும் முறை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போதல் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்வோர் கூடிய விரைவில் உடனடியாக அறிவித்து பதிவுகளை மேற்கொள்ளும் போது காணாமல் போன குறித்த நபரை தேடிக் கண்டு பிடிக்க வழிவகை செய்யும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் உடனடியாக அறிவிக்க முடியாதவர்கள் 3 மாதத்திற்குள் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் மேற்கொள்ளும் போது ஆள் அடையாள அட்டை விபரங்கள், காணாமல் போன இடம், நேரம் என்பன முக்கியமாக தெரிவிக்கப்பட வேண்டும் அத்தோடு சந்தேக நபர்கள் தொடர்பான விபரம் தெரிந்திருப்பின் அவை குறித்தும் தெரியப்படுத்தலாம்.

அவ்வாறு தெரிவிக்கும் போது அவற்றின் இரகசியத் தன்மை பேணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் விடுவிக்கப்படும் பட்சத்தில் முறைப்பாட்டாளர்கள் யாழ். அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். இவ்விடயங்கள் குறித்து பொதுமக்கள் கரிசனையுடன் செயற்படுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் கேட்டுள்ளது. (எ-4)

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக விமானத்தாக்குதல்கள் தொடரும்

## பிரதமர் டெய்லி நியூஸுக்கு செவ்வி



(கொழும்பு)

நாட்டிலே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளுக்கு எதிரான விமானத் தாக்குதலை தொடர்ந்து நடாத்துவதென அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா டெய்லி நியூஸ் பத்திரிகைக்களித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமானத் தாக்குதலில் மரணமடைந்த புலிகள் இயக்கத்தின் முக்கிய இருதலைவர்களில் ஒருவரான சு.ப.தமிழ்ச்செல்வனின் மரணம் பற்றி குறிப்பிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை அழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற விமானத் தாக்குதலையடுத்து பெரும்பான்மை சிங்கள இனத்திடமிருந்து சிறுபான்மையினருக்கான சுதந்திரத்திற்கான போராட்டத்தை துரிதப்படுத்தப்போவதாக விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இலங்கை இராணுவம் கொழும்பு நகரையண்டிய பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. (அ)

# வீட்டுச்சிறையில் முஷாரப்?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் இராணுவத் துணைத் தளபதியால் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தானில் அதிபர் முஷாரப் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்துள்ளார். நெருக்கடி நிலையை எதிர்த்து போராட்டம் நடத்திய நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முஷாரப்பே கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ள நிருபர்கள் அதிபர் மாளிகையை தொடர்பு கொண்டனர். பின்னர் இது வெறும் வதந்தி என்று தெரிய வந்தது. வெளிநாட்டு தூதரக அதிகாரிகளை சந்தித்து பேசிய முஷாரப் இந்த செய்தியை குறிப்பிட்டு இதை விட பெரிய நகைச்சுவை எதுவும் இருக்க முடியாது என்று தெரிவித்தார்.

இதனிடையே அவசர நிலை தற்காலிக ஏற்பாடு என்று வெளிநாட்டு தூதர்களிடம் பாகிஸ்தான் விளக்கம் அளித்துள்ளது.

பாகிஸ்தானில் நிலவும் அசாதாரண சூழ்நிலையின் விளைவாகவே நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக வெளிநாட்டு தூதர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# தமிழீழத்தைத் தவிர வேறு...

செல்வன் எம்மைவிட்டு பிரிந்து விட்ட சூழலில் அனைத்துலக சமூகத் தின் நியாயத் தராசு தொடர்பான எண்ணங்களும் கருத்துக்களும் எழுவது தவிர்க்கமுடியாது.

இன்று தமிழ்ச்செல்வன் குடும்பத்தினர் வருகைதரமுடியவில்லை. தமிழ்ச்செல்வனின் தாயாரும் உடன்பிறப்புக்களும் கிளிநொச்சிக்கு வருகை தருவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது என்பது நோர்வேயால் எமக்கு பக்குவமாக கூறப்படுகிறது.

உலகின் நியாயத்தராசானது ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கத்தில் எந்த வகையில் செயற்படும் என்பதனை இன்று நாம் பார்க்கிறோம். அனைத்துலக சமூகத்தின் முன்னால் எமது நியாயத்தை புரியவைத்து விடுதலை வேண்டி நிற்கும் ஒரு இனத்தின் குரலை தமிழ்ச்செல்வன் சரியாகவும் ஆணித்தரமாகவும் முன் வைத்தார்.

ஆனால், ஒரு படை பலம்மிக்க, பொருளாதார பலம் மிக்க, ஒரு அரசும் வேறு எந்த உதவிகளும் தனித்து தமது விடுதலைக்காக போராடும் இனமும் ஒரே தராசில் வைக்கப்பட்டன. அனைத்துலக சமூகத்தின் நியாயத் தராசானது நியாயம் இன்றி நடந்து கொண்டது. அந்த நியாயம் இன்மையின் ஒரு விலை தான் இன்றைய தமிழ்ச்செல்வனின் வீரச்சாவு.

தமிழ்ச்செல்வன் வீரச்சாவுக்கு என்ன பதில் என்று கேட்கிறார்கள்? சிங்கள தேசம் தமிழ்ச்செல்வனை வீழ்த்தியதற்கு பதில் என்னவென்று கேட்கிறார்கள். அதற்கு சொல்லக் கூடியது ஒரு பதில்தான். ஒரு சில படையினரோ அல்லது ஓராயிரம் படையினரோ, ஒரு சில அரசியல்தலைவர்களோ, ஒரு சில வல்லாதிக்க சக்திகளோ தமிழ்ச்செல்வனின் உயிருக்கு ஈடாக முடியாது.

தமிழீழம் என்ற உயர்ந்த கனவு தமிழீழத்திற்காக தமது உயிர்களை ஈந்த மாவீரர்களின் கனவை ஈடுசெய்ய உழைப்பதே தமிழ்ச்செல்வனின் உயிருக்கான விலை. அந்த உணர்வு என்பது தமிழ்ச்செல்வன் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் மனங்களில் பதித்துவிட்டுச் சென்றுள்ளார் என்று சொன்னால் அந்த உணர்வை இனிவரும் காலங்களில் சிங்கள தேசம் சந்திப்பதுதான்.

இனிவரும் எத்தனை ஆண்டு காலத்தின் பின்பும் தமிழர்களை அடக்கிவைத்திருந்தாலும் சுதந்திரத்திற்கான குரலை ஒலித்துக் கொண்டே இருப்பார்கள். ஓயவிடமாட்டார்கள் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான் தமிழ்ச்செல்வனின் உயிருக்கான விலையாக இருக்கும். இந்த உறுதியுடன் பயணிப்பதே தமிழ்ச்செல்வனுக்குச் செலுத்தும் உயர்ந்த வீர வணக்கமாக இருக்கும் என்றார் பொட்டு அம்மான். (ச-5)

# தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பு...

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது ;

தமிழ்ச்செல்வனின் கொலை சமாதானத்துக்கு எவ்விதத்திலும் ஒரு தடைக்கல் அல்ல, நாட்டின் சமாதான நடவடிக்கைகளையும் தமிழ்செல்வனையும் சிலர் தொடர்பு படுத்த முயற்சிக்கின்றனர். இது முற்றிலும் தவறாகும். தமிழ்ச்செல்வன் புலிகளின் அமைப்பில் பிரபாகரனுக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு தலைவரேயாவார்.

புலிகள் அமைப்புடன் அரசு மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்ச்செல்வன் ஒரு தடைக்கல்லாகவே இருந்து வந்துள்ளார். 2005 ஆம் ஆண்டு பதவியேற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இதன் முதலாவது பேச்சுவார்த்தை ஜெனீவாவில் ஆரம்பமானது, அரசாங்கம் தேசியப் பிரச்சினைக்கு முன்வைத்த கருத்துக்கள் அனைத்தும் புலிகளால் திட்டமிட்டு மறுக்கப்பட்டன.

இதனையடுத்து அடுத்த கட்ட முயற்சியாக இரண்டாவது பேச்சுவார்த்தையும் ஜெனீவாவில் நடைபெற்றது. இதிலும் புலிகள் கலந்து கொண்டு பிரதான பிரச்சினைகள் அத்தனையையும் ஒதுக்கிவிட்டு ஏ-9 பாதைக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பேச்சுவார்த்தையையும் தோல்வியடையச் செய்தனர்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தையிலும் இவர்கள் இறுதி வேளையில் நழுவிச் சென்றனர். இதற்கும் தமிழ்ச்செல்வனே புலிகளின் தரப்பில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய புலிகளின் பிரதிநிதிகள் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டார்கள். என்ற சந்தேகத்தில் புலனாய்வுப் பிரிவினரால் விமான நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டனர்.

அதற்கான சான்றுகளும் அவர்களிடம் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் கூறினார். (எ-5)

# விசேட அடையாள அட்டை...

7ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் இத் திகதிக்குப் பின் எக்காரணம் கொண்டும் இக்கால எல்லை நீடிக்கப்படமாட்டாது.

யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் இந்த அடையாள அட்டையைத் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ளவேண்டும். இவ் அடையாள அட்டை பெற்றவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்குச் செல்ல இராணுவ அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை.

இவ் அடையாள அட்டை இல்லாதவர்கள் விமானம் மூலமோ கப்பல் மூலமோ பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது. (அ)

# கடத்தல், காணாமல் போனமை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்புத்துறையைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜெனஸ்குமார் என்பவர் கடந்த 28 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு வீட்டிற்கு வந்த இனந் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த இராசதுரை திலிப்குமார் (வயது 30) என்பவர் கடந்த 3 ஆம் திகதி காலையில் யாழ்.பெருமாள் கோயிலுக்குச் செல்வதாக சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை கிழக்கு ஏழாலையைச் சேர்ந்த மகாலிங்கம் மதிசீலன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை முன்தினம் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4)

# தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வில்...

காலை முதல் பிற்பகல் வரை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளரும் புதிய அரசியல் துறைப் பொறுப்பாளருமாகிய பா.நடேசன், புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டு அம்மான், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் கா. வே.பாலகுமார். முக்கிய தளபதிகள், உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், அரச, அரசு சார்பற்ற நிறுவன அதிகாரிகள் மற்றும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

அஞ்சலி நிகழ்வையடுத்து கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து பாடசாலை மாணவர்களின் அணியிசையுடன் தமிழ்ச்செல்வனின் உடல் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு விடுதலைப் புலிகளின் முழு இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

### வேவு விமானம் நோட்டம்

தமிழ்ச்செல்வனின் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றவேளை கிளிநொச்சி நகரப் பிரதேச வான்பரப்பில் விமானப் படையின் வேவு விமானம் வட்டமடித்து நோட்டம் விட்டதாக கிளிநொச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ்ச்செல்வனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காகக் கிளிநொச்சிக்குச் சென்ற தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதகுருமார்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் கெடுபிடிகளுக்கு உள்ளாகியதன் பின்னரே தமது பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஓமந்தையில் கெடுபிடி

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி நேற்று நண்பகலின் பின்னர் மூடப்பட்டிருந்ததனால், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கிளிநொச்சியிலிருந்து ஓமந்தை வரையில் வந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மறைந்த தமிழ்ச்செல்வனின் இறுதிக் கிரியைகளையொட்டி நேற்று வவுனியா, மன்னார் மாவட்டங்களில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் காலையில் மூடப்பட்ட கடைகள் பின்னர் படையினரின் உத்தரவுக்கமைய திறக்கப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

வவுனியாவில் கடைகள், அரச தனியார் அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள் என்பன மூடிக்கிடந்தன. போக்குவரத்துக்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்றன. படையினரும் பொலிஸாரும் விசேட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். சந்தேகத்திற்கிடமானவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை காணப்பட்டபோதிலும் . இனந்தெரியாத ஒரு சோகம் காணப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ்ந்த பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினர் விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். யாழ்.நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.